توحيد الألوهية

# தவ்ஹீதுல் உலூஹிய்யா

ஆசிரியர்:

**கலாநிதி அஷ்ஷெய்க் ஹைதம் முஹம்மத் சர்ஹான்**

முன்னால் மதீனா புனித பள்ளி கலாசாலை ஆசிரியர்,

ம:.ஹத் சுன்னாஹ் இணையதள மேற்பார்வையாளர்.

WWW.MAHADSUNNAH.COM

www.alsarhaan.com

# தவ்ஹீதுல் உலூஹிய்யா

அல்லாஹ்வின் ருபூபிய்யத்தை ஏற்று ஈமான் கொண்டு அதில் அவனுக்கு நிகராக யாருமில்லை என நம்பிய ஒரு மனிதன் அதற்கு அடுத்ததாக அல்லாஹ்வே வணக்கத்திற்குரியவன் என பொருள்படும் அவனது "உலூஹியத்தை" ஏற்பதும் அவசியமாகும்.

எனவே, வெளிப்படையான, மறைமுகமாக இபாதத் அனைத்தையும் அவனுக்கு மாத்திரமே செலுத்த வேண்டும்; அவன் அல்லாத யாருக்கும் அதை செலுத்தக் கூடாது. ஏனெனில், எந்த இறைவன் படைத்து, உணவளித்து, ஆட்சி, நிர்வாகம் என அனைத்திலும் தனித்து விளங்குவானோ அவனே வணக்கத்திற்கு தகுதியானவன் ஆவான். அப்படியாயின் அல்லாஹ் மாத்திரமே அதற்கு தகுதியுடையவன் அவனைத் தவிர வேறு யாரும் இல்லை. ஆகவே அவனைத் தவிர வேறு யாரும் வணக்கத்திற்கு தகுதி பெறவும் மாட்டார்கள்.

ஒரு மனிதன் அல்லாஹ்வின் ருபூபிய்யத்தை ஏற்பதால் மாத்திரம் பூரண முஸ்லிமாக மாறிவிட முடியாது; மாறாக அவனே வணக்கத்திற்குரியவன் என்பதை ஏற்று அதற்குத் தக செயற்பட வேண்டும், அப்போதுதான் அவனுடைய ருபூபிய்யத்தை ஏற்றுக்கொண்டதும் முழுவடிவம் பெற்று இஸ்லாத்தில் முழுமையாக நுழைந்து விட்டதாக அமையும்.

*மக்கா முஷ்ரிக்குகளை பொறுத்தவரை அவர்கள் ருபூபிய்யத்தை ஏற்றாலும் அல்லாஹ் மாத்திரம் வணக்கத்திற்குரியவன் என்பதை முற்றாக மறுத்தனர். ஆகவே, குர்ஆனின் முழு வசனங்களின் போக்கும் ருபூபிய்யத்தை குறிப்பிடும் அதே நேரம் வணக்கம் யாவும் அல்லாஹ்வுக்கு மாத்திரம் நிறைவேற்ற வேண்டும் என்பதை இணைத்தே குறிப்பிடுகின்றன.*

*இதை பின்வரும் திருமறை வசனம் தெளிவாக விளக்குகிறது:*

﴿أَمَّنْ خَلَقَ ٱلسَّمَٰوَٰتِ وَٱلْأَرْضَ وَأَنزَلَ لَكُم مِّنَ ٱلسَّمَآءِ مَآءً فَأَنۢبَتْنَا بِهِۦ حَدَآئِقَ ذَاتَ بَهْجَةٍ مَّا
كَانَ لَكُمْ أَن تُنۢبِتُوا۟ شَجَرَهَآ ۗ أَءِلَٰهٌ مَّعَ ٱللَّهِ ۚ بَلْ هُمْ قَوْمٌ يَعْدِلُونَ ٦٠﴾

**அன்றியும், வானங்களையும் பூமியையும் படைத்து, உங்களுக்கு வானத்திலிருந்து மழையை இறக்கி வைப்பவன் யார்? பின்னர் அதைக் கொண்டு செழிப்பான தோட்டங்களை நாம் முளைக்கச் செய்கிறோம். அதன் மரங்களை முளைக்கச் செய்வது உங்களால் முடியாது. (அவ்வாறிருக்க) அல்லாஹ்வுடன் (வேறு) நாயன் இருக்கின்றானா? இல்லை! ஆயினும் அவர்கள் (தம் கற்பனை தெய்வங்களை அல்லாஹ்வுக்கு) சமமாக்கும் மக்களாகவே இருக்கிறார்கள். (27:60)**

*தவ்ஹீதுல் உலூஹிய்யா என்பது இஸ்லாத்தின் அடிப்படைஅம்சமும், அதன் ஆணிவேரும் ஆகும். அதை நிலைநாட்டவே அல்லாஹ் வேதங்களை அருளி, இறைத்தூதர்களை*

*அனுப்பினான்.அதற்காகவே சொர்க்கம் நரகம் படைக்கப்பட்டுள்ளது.*
*தவ்ஹீதுல் உலூஹிய்யா வேண்டி நிற்பது வணக்கம் யாவற்றையும் அல்லாஹ்வுக்கு மாத்திரம் தூயதாக்கி, அவனை வழிப ட்டு, மகத்துவப்படுத்தி, அன்பு வைத்து, அவனுக்காக மாத்திரம் பணிந்து, அவன் மீதே பொறுப்புச்சாட்டி, பயத்துடனும் ஆதரவுடனும் அவனைப் பிரார்த்தித்து, அவன் பக்கம் முற்றாக சாய்ந்து இருப்பதையே குறிக்கிறது. மாத்திரமன்றி அறுத்துப்பழிடல், நேர்ச்சை செய்தல் யாவும் அவனைத் தவிர வேறு யாருக்காகவும் நிறைவேற்றப்படக்கூடாது. மற்றும் ஏனைய உள, உடல் சார்ந்த வணக்க வழிபாடுகள் யாவும் அல்லாஹ்வுக்கு மாத்திரம் நிறைவேற்றப்பட வேண்டும் அதில் யாரையும் இணையாக்க கூடாது.*
*திமறையில் அல்லாஹ் கூறுகிறான்*:

﴿قُلۡ إِنَّ صَلَاتِي وَنُسُكِي وَمَحۡيَايَ وَمَمَاتِي لِلَّهِ رَبِّ ٱلۡعَٰلَمِينَ ١٦٢ لَا شَرِيكَ لَهُۥۖ وَبِذَٰلِكَ أُمِرۡتُ وَأَنَا۠ أَوَّلُ ٱلۡمُسۡلِمِينَ ١٦٣﴾

நீர் கூறும் "மெய்யாக என்னுடைய தொழுகையும், என்னுடைய குர்பானியும், என்னுடைய வாழ்வும், என்னுடைய மரணமும் எல்லாமே அகிலங்களின் இறைவனாகிய அல்லாஹ்வுக்கே சொந்தமாகும். (6:162)